**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 116/2019**

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 26.11.2025 | | |
| பெயர்: | சுந்தரபாண்டியன்<br>(DW–1 Cross ) | தகப்பனார் பெயர்: | கலியமூர்த்தி |
| கிராமம்: | பச்சைபெருமாநல்லூர் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 45 /2025 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 26.11.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்– 13.37)**

1. சாரதாம்பாள் எனது தாயார். ரேவதி எனது சகோதரி ஆவார். தாவா சொத்து என்பது எனது பாட்டனார் பெருமாளுக்கு நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் பெருமாள் பெயரில் F படிவம் கொடுக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். பெருமாளுடைய மகன்தான் எனது தகப்பனார் கலியமூர்த்தி. பெருமாளின் மனைவி சிகப்பாயி. பெருமாளுக்கு சிந்தாமணி என்கிற மற்றொரு மனைவி இருந்தார், அவர் இறந்துவிட்டார்.

2. சிந்தாமணிக்கும் பெருமாளுக்கும் பிறந்த ஒரே மகள்தான் பாப்பாத்தி (எ) தமிழ்செல்வி. தமிழ்செல்விக்கு அரசாளமங்கலம் என்ற ஊரில் திருமணம் நடைபெற்று சுமார் 50 வருடங்களுக்கு மேல் இருக்கும் என்றால் சரிதான். F படிவம் என்னிடம் உள்ளது என்றால் சரிதான், அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தீர்வு சான்றிதழ் வாங்கியுள்ளேன், அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

3. தாவா சொத்தை வாதி தான் சாகுபடி செய்து வருகிறார் என்றால் இல்லை, என்னிடம் தான் உள்ளது, நான்தான் சாகுபடி செய்து வருகிறேன். நான் சாகுபடி செய்து வருகிறேன் என்பதற்கு ஆதாரமாக பயிர்க்காப்பீடு, வறட்சி நிவாரணம் உள்ளிட்ட எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நில உச்சவரம்பு சட்டத்தின்கீழ் பணம் செலுத்தியதற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. எனது தகப்பனார் 28.02.2002ல் வாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் தான் வா.சா.ஆ.1 என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் 3ம் பக்கத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் தனியாக எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல. என்னிடம் காட்டப்படும் நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையில் முதலாவதாக உள்ள கையெழுத்து என்னுடையதல்ல.

5. வா.சா.ஆ.1ல் 3வது பக்கத்தில் 3வதாக உள்ள கையெழுத்து எனது தாயாருடையது என்றால் இல்லை. எதிர்வழக்குரையில் உள்ள கையெழுத்து எனது தாயாருடையது அல்ல. என்னிடம் காட்டப்படும் நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையில் இரண்டாவதாக உள்ள கையெழுத்து என்னுடைய தாயாருடையதுதான் என்றால் சரியல்ல. எனது தகப்பனார், தாயார் மற்றும் நான் சேர்ந்து முழு சம்மதத்துடன் வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிக்கொடுத்தோம் என்றாலும், அதன்பிறகு வாதி தான் தாவா சொத்தின் வசத்தில் இருந்து வருகிறார் என்றாலும் சரியல்ல. அதில் நெல், பருத்தி சாகுபடி செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

6. நாங்கள் தொகையை பெற்றுக்கொண்டு வா.சா.ஆ.1 ன் படி கிரயம் எழுதி தராமல் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யாக கட்சி நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதற்கு நான் பதில்

அறிவிப்பு அனுப்பியுள்ளேன். அந்த பதிலறிவிப்பில் தீர்வு சான்றிதழ் வாங்கியுள்ளேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

7. தாவா சொத்து எங்களிடம் உள்ளது என்றும், கிரய ஒப்பந்தம் போலியானது என்றும் நாங்கள் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் மேல்புறம் சிவலிங்கம் என்பவரின் இடம் உள்ளது என்றால் சரிதான். கிழக்கு பக்கத்தில் மாணிக்க ஆசாரியின் புஞ்சை நிலம் உள்ளது. வடக்கு பக்கத்தில் குகன் என்பவரின் நிலம் உள்ளது. தெற்கில் கன்னிக்கோயில் பாசன வாய்க்கால் உள்ளது.

8. தாவா சொத்தின் சர்வே எண் என்பது 12/11 என்றால் சரிதான். தாவா சொத்தை வாதிக்கு 1992 முதல் வாய்மொழியாக குத்தகை சாகுபடிக்கு விடப்பட்டது என்றாலும் அதன்பிறகு 2002 முதல் ஒப்பந்தம் மூலமாகவும் வாதி சாகுபடி செய்து வருகிறார் என்றாலும் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் தாவா சொத்தில் என்ன பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் கூறவில்லை. வாதி பிராதில் கோரியபடி நாங்கள் கிரயம் எழுதி கொடுக்க கடமைபட்டவர்கள் என்றாலும் தாவாப்படி வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாணை செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 14.07)**